## அத்தியாயம் 5

" அந்த சரண்யாவாலயா நீ அவி கூட சண்ட போட்ட?" ஒரே குரலில் கேட்டனர் யோகாவும், கீதாவும்.

" ஆமா. அவளுக்கு அவி பத்தி எல்லாமே தெரிஞ்சிருக்கு. நான் கூட அவன் அம்மா கூட பேசுனது கிடயாது. பட் அவ பேசிருக்கா. அன்னிக்கு ஈவ்னிங் நான் கிளினிக்ல அவியை பாக்குறதுக்கு போனேன். அப்போ அவ என் கிட்ட சொல்லுறா ' உங்கள விட அவினாஷ் பத்தி எனக்கு நல்லா தெரியும். அவன் டெய்லி நான் கொண்டு வர ப்ரேக்ஃபாஸ்ட் தான் சாப்டுவான், அவிக்கு அது பிடிக்கும், அவிக்கு இது பிடிக்கும்னு '. எனக்கு வர ஆத்திரத்துக்கு அவ கழுத்த நெரிச்சு கொன்னுடலாமானு கூட யோசிச்சேன்"

" நான் சொல்றேன் அந்த சரண்யா ஆன்ட்டி உங்க ரெண்டு பேர் கிட்டயும் ஏதோ கேம் ஆடுறா" இது கீதா.

" ஏய்! அவ நல்ல பொண்ணுனு அஜி ரொம்ப உருகிறான் டி" என்று யோகா சொல்லவும் கீதாவும், ரியாவும் அவளை அதிர்ச்சியாக பார்த்தனர்.

" என்ன?? அஜிக்கு மூளை கெட்டு போச்சா? என்றாள் ரியா.

" நாம் ஏதாச்சும் பண்ணனும்டி.. இல்லனா இந்த ஆன்ட்டி நம்ம ஃப்ரெண்ட்ஸ் எல்லாரையும் ஒரு வழி பண்ணிடுவா" என்று யோசனையுடன் கூறினாள் கீதா.

அவளுக்கு கால் வரவும் ரியா கீதாவின் போனை எடுத்து பார்த்து விட்டு "உன்னோட ஃப்ரெண்ட் அவி தான் கால் பண்றான். என்னனு கேளு" என்றாள்.

அவினாஷ் இந்த பிரச்சனைகளுக்கு எல்லாம் காரணம் சரண்யா தான் என்று கூறினான். ரியாவுக்கு இதை புரியவைக்க முயன்றும் அவள் தான் கூறுவதை காதில் கேட்காமல் கோவப்படுவதையும் கூறி வருத்தப்பட்டான்.

சரண்யா அவினாஷ் மற்றும் விக்னேஷ் இருவரும் மருத்துவராக இருக்கும் அதே மருத்துவமனையில் தான் நர்சாக பணியாற்றி வந்தாள். அவளின் கலகலப்பான பேச்சால் எளிதாக மற்றவர்களின் மனதில் நுழைந்து விடும் திறமை படைத்தவள். ஆனால் அந்த திறமையை அவள் பயன்படுத்தி கொண்ட விதம் அவளுடன் பழகிய சில நாட்களிலேயே அவினாஷுக்கு தெரிந்துவிட அவளிடம் இருந்து ஒதுங்கிவிட்டான் அவன்.

அந்நிலையில் தான் விக்னேஷின் சித்தப்பா மகன் அஜித் விக்னேஷை சந்திக்க மருத்துவமனைக்கு வந்தவன் சரண்யாவின் வலையில் நன்றாக மாட்டிக் கொண்டான். அவளுக்கும் மருத்துவரை விட கோடிகளில் புரளும் பிஸினஸ்மேன் பெரிதாக தோன்ற அதற்கு மேல் அவள் அவினாஷை தொந்தரவு செய்யவில்லை.

ஆனால் ஒரு நாள் அவினாஷை சந்திக்க வந்த ரியாவிடம் தனக்கு அவனை பற்றிய அனைத்து விவரமும் தெரியும் என்ற ரீதியில் அவள் பேசி வைக்க காதலர்களுக்குள் போர் மூண்டது. ரியாவை பொறுத்தவரை அவளின் நண்பனான அஜித் சரண்யாவுடன் பழகுவதையே விரும்பாதவளுக்கு அவளுடைய காதலன் சரண்யாவிடம் பழகிய விவரம் தெரிந்தும் அவள் மனமுடைந்து போனாள். அவினாஷ் தானும் சரண்யாவும் நண்பர்கள் மட்டும் தான், அதுவும் அவளது குணம் தெரிந்து தான் ஒதுங்கிய பிறகு தான் அவளுடன் பேசுவது கூட இல்லை என்று எவ்வளோ முயன்று விளக்கியும் ரியாவை அவனால் சமாதானப்படுத்த இயலவில்லை.

கீதா அவனை சமாதனப்படுத்திவிட்டு சரண்யா விஷயத்தை தானும் யோகாவும் பார்த்து கொள்வதாக கூறவும் அவன் நிம்மதியுற்று போனை வைத்தான்.

கீதாவும் அவியுடன் பேசி விட்டு ரியாவை சமாதானப்படுத்தி தூங்குவதற்குள் இரவு நேரம் கடந்திருந்தது.

---

Haaren city....

இரவு 8.30... அப்போது தான் போன் பேசிக் கொண்டிருந்தான் வருண்.

" கம் ஆன் கீர்த்தி! லைஃப்ல பிராப்ளம்ஸ் இல்லாம இருக்கணும்னா நம்ம மூவில தான் ஆக்ட் பண்ணனும். வீ ஹேவ் டு ஃபேஸ் தெம். அது தான் கெத்து. அத விட்டுட்டு இப்பிடி பொலம்ப கூடாது. ஓகே வா?? குட் நைட்... இல்ல.. நான் தூங்க டைம் ஆகும்...பை" என்று சொல்லி காலை கட் செய்தான்.

அங்கு வந்த அரவிந்த் " அது எப்பிடிடா எல்லா ப்ராப்ளம்ஸயும் பேசியே இல்லாம பண்ணுற?? நீ பேசாம சைக்யாடிரிஸ்ட்டா போயிருக்கலாம்டா மச்சான்" என்றான்.

" உன் கூட பேசுனா எவ்ளோ பெரிய பிரச்சனையும் கடுகு மாதிரி தோண ஆரம்பிச்சுரும்னு நம்ம சூசன் சொல்லும். கரெக்ட் தான் மச்சி! " என்று வருணை புகழ

"அப்போ நம்ம ரெண்டு பேரும் சேந்து ஒரு கிளினிக் ஆரம்பிச்சிருவோம்...வருமானம் பிச்சுக்கும் டா" என்று அரவிந்தை கிண்டல் செய்த படியே கிச்சனில் தோசை ஊற்ற ஆரம்பித்தான்.

ஜெர்மனி வந்ததிலிருந்து அரவிந்தும் வருணும் வீட்டிலேயே தான் சமைத்து சாப்பிடுவார்கள். வருண் நன்றாக சமையல் செய்வதால் அவர்களுக்கு வெளியே சென்று சாப்பிடும் அவசியம் வரவும் இல்லை.

" நாளைக்கு சிக்கன் பிரியாணி செய்யலாமாடா மச்சி?"என்று வருண் கேட்கவும் அதற்கு தான் காத்திருந்தாற் போல " உன் இஷ்டம்டா! பை தி வே உனக்கு என்ன ஹெல்ப் வேணுனாலும் தயங்காம என் கிட்ட கேளுடா" என்று பெருந்தன்மையுடன் ஒப்புக் கொண்டான் அரவிந்த்.

" உனக்கு வரப் போற வைஃப் குடுத்து வச்சவங்கடா! நீ சமையல்லயே அவங்கள இம்ப்ரஸ் பண்ணிடுவ" என்று பாத்திரங்களை கழுவி அடுக்கினான் அரவிந்த்.

அப்போது வருணுக்கு கீதா நியாபகம் வந்தது. " எனக்கு சமையல்ல அனா, ஆவன்னா கூட தெரியாது வருண். குக்கிங் எல்லாமே யோகாவும், ரியாவும் பாத்துப்பாங்க" என்றவளை " அப்போ நீ கல்யாணம் பண்ணிட்டு போறப்ப அவங்க ரெண்டு பேரையும் பொறந்த வீட்டு சீரா கொண்டு போய்டு மா" என்று கிண்டல் செய்ததை நினைத்து சிரித்தான்.

" மை டியர் ஆடிட்டியூட் அலமேலு! உனக்கு ஈக்குவலா நீ மட்டும் தான் இருக்க முடியும்! குக்கிங் தெரியாது, சாரி கட்ட தெரியாது. பட் சோ வாட்?? இதுலாம் தெரிஞ்சா தான் பொண்ணா?? இது எல்லா பொண்ணுங்களுக்கும் தெரியுமே!! பட் உன்னை மாதிரி தைரியமா, மனசுல நெனைச்சத பேசுற, எந்த வெளி வேஷமும் இல்லாம நடந்துக்குற பொண்ணு இனிமே தான்

பொறக்கும். கூ நோஸ் அது உன்னோட பொண்ணா கூட இருக்கலாம்" என்று நினைத்து சிரித்துக் கொண்டான்.